**அரசு / அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்கள், நேரடிப் பி.எட். பட்டப் படிப்பு பயின்றிட அனுமதி வழங்குவதைத் தவிர்த்தல் அரசாணை**

பள்ளிக்கல்வி – அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆசிரியர்கள், நேரடிச் சேர்க்கை மூலம் முழு நேர (Regular Course) படிப்பில் சேர்ந்து பி.எட். பட்டப் படிப்பு பயின்றிட அனுமதி வழங்குவதைத் தவிர்த்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வி (பக6(2))த் துறை**

**அரசாணை (நிலை) எண் : 135** **நாள் : 23.07.2013**

படிக்கப்பட்டவை :

1) அரசாணை (நிலை) எண் : 944, கல்வித் துறை, நாள் : 29.07.1989

2) பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க. எண் : 6462/டி2/இ1/2008, நாள் : 05.01.2009, 28.07.2009, 29.08.2011 மற்றும் 15.06.2012.

ஆணை :

மேலே படிக்கப்பட்ட கடிதங்கள், உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் ஏற்கனவே தான் பெற்றுள்ள கல்வித் தகுதியினைவிடக் கூடுதலாக உயர் கல்வியினை தொலைதூரக் கல்வி மூலம் பயிலவும் மற்றும் பகுதிநேர பாடத்தில் சேர்ந்து பயிலவும் அனுமதி அளிப்பது சார்பாக அரசாணை (நிலை) எண் : 944, கல்வி(டி2)த் துறை, நாள் : 29.07.1989–ன் படி, பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் அளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்காண் அரசாணையினைத் தொடர்ந்து பள்ளிக் கல்வி இயக்க செயல்முறைகள் ந.க. எண் : 156087/டி3/1990, நாள் : 18.09.1990–ன் படி எம்.பில்., பி.எச்.டி. போன்ற பகுதிநேர உயர்கல்வி பயில்வதற்கு மட்டும் பள்ளிக் கல்வி இயக்குநாரின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும், தொலைதூரக்கல்வி மூலம் இதர உயர்கல்வி (U.G. / P.G.) பயில அனுமதி வழங்கிட மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்றும், இந்நிலையில், தற்போது பி.எட். போன்ற முழுநேரப் படிப்புகள் கல்லூாரியில் நேரடியாகச் சேர்ந்து பயில முன் அனுமதி கோரும் கோரிக்கைகள் மீது அனுமதி வழங்குவது சார்பாக, அரசாணை (நிலை) எண் : 994, கல்வி(டி2)த் துறை, நாள் : 29.07.1989–ல் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றும், மேலும், ஆய்வு அலுவலர்களிடமிருந்து நேரடி சேர்க்கை மூலம் பி.எட். போன்ற நேரடி சேர்க்கை படிப்பிற்கு முன் அனுமதி வேண்டி கோரிக்கைகள் பெறப்பட்டு அதன் மீது ஆணைகள் வழங்க இயலாத நிலை உள்ளது என்றும் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில் பள்ளிக் கல்வி இயக்குநர் தொிவித்துள்ளார்.

2. மேலும், அரசுப் பள்ளிகளில் ஆசிாியர்களுக்கு வழங்கப்படும் அனுமதியினை மேற்கோள்காட்டி அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் துறையின் முன் அனுமதி பெறாமல் நேரடிச் சேர்க்கை மூலம் உயர்கல்வி பயின்று, அக்காலங்களை முறைப்படுத்தக் கோரி பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டு வருகின்றன எனத் தொிவித்து, அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் நேரடி சேர்க்கை மூலம் உயர்கல்வி பயில்வதற்கு அனுமதிப்பது தொடர்பாக பள்ளிக் கல்வி இயக்குநர் கீழ்க்காணும் தமது கருத்துருவிற்கு ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்.

i. நிதி உதவி பெறும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் மாணவர்களின் கல்வி நலனுக்கு பயனுள்ள அவர்கள் விரும்பும் அனைத்து வகையான படிப்புகளையும் நேரடி சேர்க்கை மூலம் முழு நேர (Regular Course) உயர் கல்வி பயில அனுமதி அளிப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

ii. நேரடி சேர்க்கை மூலம் உயர் கல்வி பயிலுவதற்கும், எம்.பில். மற்றும் பி.எச்.டி. போன்ற தொலை தூரக் கல்வி மற்றும் பகுதிநேரடிப் படிப்புகள் பயிலுவதற்கும் முன் அனுமதி அளித்திடும் அதிகாரத்தினை சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு பகிர்ந்தளித்திட பரிசீலிக்கலாம்.

iii. அரசு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிாரியர் மற்றும் ஆசிாரியரல்லாப் பணியாளர்கள் நேரடி சேர்க்கை மூலம் முழு நேர உயர் கல்வி பயில அனுமதி வழங்கும் போது, அவர்களுக்கு மருத்துவ விடுப்புத் தவிர தகுதியுள்ள பிற விடுப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் உயர் கல்வி பயில இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கும் அவர்கள் பணிபாரிந்த காலத்தினை கணக்கில் கொண்டு மருத்துவ விடுப்பினைத் தவிர, அவர்களது கணக்கில் இருப்பில் உள்ள தகுதியுள்ள ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த அலுவல் பேரில் ஈட்டா விடுப்பு வழங்குவது குறித்தும், அவ்விடுப்புகள் போக தேவைப்படும் மீதி நாட்களுக்கு ஊதியமில்லா விடுப்பு வழங்குவது குறித்தும் பரிசீலிக்கலாம். மேலும், தகுதியுள்ள விடுப்புகள் வழங்கப்படுவதால் உயர் கல்வி பயின்ற காலத்தினை பின்னர் முறைப்படுத்தப்பட வேண்டிய அவசியம் எழாது.

**3.**மேலே பத்தி 2–ல் உள்ள பள்ளிக் கல்வி இயக்குநாரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பாரிசீலனை செய்து, பின்வருமாறு முடிவெடுத்து அவ்வாறே ஆணை வெளியிடுகிறது.

i. அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் நேரடிச் சேர்க்கை மூலம் பி.எட். பயின்ற காலங்களை மருத்துவ விடுப்பினைத் தவிர, அவர்களுக்குத் தகுதியுள்ள, அவர்களது கணக்கில் இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த அலவல் போரில் ஈட்டா விடுப்பு வழங்கியும், அவ்விடுப்புகள் போக தேவைப்படும் மீதி நாட்களுக்கு ஊதியமில்லா விடுப்பு வழங்கியும், முறைப்படுத்த பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

ii. மேற்கண்ட இவ்வனுமதியானது, ஆணை வெளியிடப்படும் நாளுக்கு முந்தைய நாளில் **(22.07.2013)** நேரடிச் சேர்க்கை மூலம் பி.எட். பயின்ற அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மட்டுமே பொருந்தும் எனவும்,

iii. மேலும், தமிழ்நாட்டில் தற்பொழுது பெரும்பாலான பல்கலைக் கழகங்களில், தொலைதூரக் கல்வி மூலம் பி.எட்./பட்டப்படிப்பு/ முதுகலை பட்டப்படிப்பு

பாடப்பிரிவுகள் நடத்தப்பட்டு, அவற்றினை படிப்பதற்கு ஆசிரியர்களுக்கு சார்ந்த அலுவலர்களால் அனுமதிக்கப்பட்டு வருகிறது. நேரடிச் சேர்க்கை மூலம் உயர் கல்வி பயில்வதற்கு அனுமதி அளிப்பது தொடர்பாக பொதுவான அரசாணை ஏதும் தற்போது இல்லை. மேலும், அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு விடுப்பில் செல்ல அனுமதி அளித்து, அவர்கள் நேரடிச் சேர்க்கை மூலம் உயர்கல்வி பயில்வதற்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் அனுமதி வழங்கப்படுவதினால் மாணவர்களின் கல்வி நலன் பாதிக்கப்படுகிறது. எனவே, நேரடிச் சோக்கையில் பி.எட்./ பட்டப்படிப்பு / முதுகலைப் பட்டப்படிப்பு பயில்வது தொடர்பான அரசாணை ஏதும் இல்லாத நிலையில், இனிவரும் காலங்களில் அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் நேரடிச் சேர்க்கை மூலம் பி.எட்./ பட்டப்படிப்பு / முதுகலைப் பட்டப்படிப்பு பயில்வதற்கு அனுமதி வழங்குவதற்கு தவிர்க்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

4.இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண் : 37733/கல்வி–11/2013, நாள் 18.07.2013–ல் பெறப்பட்ட அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்